

# பயணம்

இதழ்- 13

ஜனவரி- 2019

*ஸ்ரீ அண்ணன் சுவாமிகளிடம் சமர்ப்பிக்கப்படுகிறது--இறை நாட்டம் கொண்ட அன்பர்களுக்காக.....

www.sriannanswamigal.com

www.sriannanswamigalmobile.in

'Sri Annan Swamigal' in Google Play Store

## முன்னுரை

இறைவனை நாடுபவர்கள்,பெரும்பாலும் தனது ஆரம்ப நாட்களில் பல குழப்பங்களுக்கு ஆளாகின்றனர். தூசி படிந்த அறையை சுத்தம் செய்ய முற்படும்போது பெரும் புழுதி கிளம்பி முன்பிருந்த வெளிச்சத்தையும் மறைப்பது போல ,ஆத்ம சாதகனுக்கு தற்காலிக இருளும், மயக்கமும் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் அவனுக்கு துணை, குருவின் அரவணைப்பு மட்டுமே. குருவருளும், இறையருளும் யாருக்கு கிடைக்கின்றதோ.. அவர் பேறு பெற்றவர். அவ்வாறு அருள் கிடைக்க ஒரு சாதகன் தன்னை தயார் படுத்திக்கொள்வது மிகவும் அவசியம். இறைவனே எல்லாம் செய்வான் எனக்கு, என தமோ குண தாக்கத்தில் ஒருவன் உறங்கிகொண்டிருந்தால், மேலும் மயக்கத்தில் ஆழ்ந்து போவான். எனவே தேடலின் தீவிரம், சரணாகதியின் அவசியம்,இறைவன் நம்மை ஆட்கொள்ளும் விதம்,குருவின் அவசியம், குருவின் மகிமை, குருவின் அருள் இவற்றை பற்றி நன்றாக உணர்ந்து தெளிந்த மஹாத்மாக்களின் அனுபவங்களை இங்கு நாம் தருகிறோம்.இவை ஆத்ம சாதகர்களுக்கு, இறைஞான தரிசனம் என்ற பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

# உள்ளே

| படைப்புக்கள் | பக்கம் எண் |
|---|---|
| புத்தாண்டு வாழ்த்துக்கள் | 04-06 |
| முக்கிய ஆத்ம சாதனைகள் | 07-14 |
| கர்மயோகம் | 14-22 |
| கர்மயோக உரை | 22 |






(சுவாமி சிவானந்தரின் புத்தாண்டு உரையிலிருந்து… )

ஒரு இனிய புத்தாண்டு உங்கள் முன் உள்ளது. ஆத்ம சாதனையை வீரத்துடன் செய்து இறை ஞானத்தை பெற ஒரு வாய்ப்பாக இப்புத்தாண்டை அமைத்துக்கொள்ளவேண்டும். ஆரவார உலகத்தின் சத்தங்களும் சலனங்களும் உங்கள் காதுகளை எட்டாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். நம்முள்ளிருக்கும் இறைவனின் அருளோசையை கேட்க ஆயத்தப்படுத்திக்கொள்ளுங்கள்.

கடந்தகால தவறுகளில் மூழ்கிவிடாமல் அவற்றைவிட்டு வெளியே வர, நேர்மையுடன் நடந்துகொள்ள இப்போதே நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இறைவனை ஆழ்ந்த சரணாகதியுடன் வழிபடுங்கள்.நம் பாவங்களை அவன் எரித்துவிடுவான்.நம்மை நல்வழியில் நடத்துவான். நமது எல்லா செயல்களையும் இறையருளின் அடித்தலத்திலேயே நாம் செய்தாகவேண்டும். ஒவ்வொரு பிரச்சனைக்கும் மூலகாரணமாக இருக்கும் தடைசெய்யும் ஆழ்மன எண்ண பதிவுகளை சுய பரிசோதனையுடனும் இறைசிந்தனையுடனும் வேரோடு பிடுங்கி எறிய வேண்டும்.

காலையில் எழுந்திரு..இறைவனின் பிரம்மாண்ட தன்மையையும் அவன் எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பதையும் நினைத்து அவனை உருக்கமுடன் வணங்கு.முழு நாளையும் பக்தி மற்றும் சரணாகதி பாவனையில் கழிக்கவேண்டும். எல்லா உருவத்திலும் பெயர்களிலும் இறைவனை பார்த்து தினசரி வேலைகளை செய்தாகவேண்டும்.

பணிவுடனும் தாராளமாகவும் இருக்கவேண்டும். மறக்கவும் மன்னிக்கவும் கற்றுக்கொள். உண்மையாகவும் நேர்மையாகவும் இரு.யாரையும் ஏமாற்றவோ, தொல்லை தரவோ, துன்புறுத்தவோ கூடாது.. இறைவன் எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் உண்மையை மனதில், அறிவில் இருத்தி மற்றவர்களுக்கு நன்மை செய்யும் காரியங்களை செய்யவேண்டும்.

புலன்களையும் மனதையும் கட்டுப்படுத்தி சுயநலத்தையும் பேராசையையும் துறந்து இறைஞானத்தை நோக்கி வீரத்துடன் பயணிக்கவும்.நேரமும் வாழ்க்கையும் கரைந்து கொண்டேபோகிறது. இந்த உடலோ அழியக்கூடியது.. ஒவ்வொரு மணித்துளியும் விலைமதிப்பற்றது.. எனவே இறைவனை நோக்கிய பயணம் உன்னில் நிகழட்டும்.

இறைவன் உன்மீது அமைதி,பிரகாசம், ஆனந்தம் இவற்றை பொழிவாராக..எல்லா வெற்றியும் உனக்கு கிடைக்கட்டும். குருவின் திருவடி பற்றி எல்லா உயர் நிலையும் அடைவாயாக.

# இருபது முக்கிய ஆத்ம சாதனைகள்.

*(சுவாமி சிவானந்தரின் மிக முக்கிய அறிவுரையில் ஒன்று.. இந்த இருபது ஆத்ம சாதனைகள்)*

1.பிரம்மமுகூர்த்தம்:

தினமும் காலை 0400 மணிக்கு எழுந்திரு. தியானத்துக்கு ஏற்ற நேரம் இது. இவ்வேலையில் தியானம் செய்தால் நமக்கு பலன் அதிகம்.

2.ஆசனம்:

பத்மாசனம்,சித்தாசனம் அல்லது சுகாசனத்தில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமர்ந்து ஜபமோ, தியானமோ அரைமணி நேரம் செய். கொஞ்சம் கொஞ்சமாக இந்த நேரத்தை மூன்று மணி நேரமாக நீட்டிப்பு செய்.

சிரசாசனம், சர்வங்காசனம் இவற்றை செய்து ஆரோக்கியத்தையும் பிரம்மசரியத்தையும் அதிகப்படுத்திக்கொள். நடத்தல் போன்ற எளிய உடற்பயிர்ச்சியை தினமும் செய். இருபது பிரணாயாமம் செய்.

## 3.ஜபம்

உனக்கு பிடித்த மந்திரம் ஒன்றை ஜபம் செய். ஓம் நமோ நாரயணாய!; ஓம் நம சிவாய!; ஓம் சரவணபவாய நம!; சீதா ராம்!; ஸ்ரீராம்!; ஹரி ஓம்!; காயத்ரி போன்ற மந்திரங்களை 108 லிருந்து 21600 தடவை தினமும் ஜபம் செய்.

## 4.உணவு:

நம் மனதை சமநிலையோடு வைக்கும் உணவான சாத்வீக உணவை உண்ணவேண்டும். அதிக காரம்,புளிப்பு,பூண்டு,வெங்காயம்,எண்ணெய், கடுகு,பெருங்காயம் இவற்றை தவிர்க்கவும். மிதமான உணவாகவும் வயிற்றை முழுவதும் நிரப்பாமலும் உண்ணவேண்டும். மனதுக்கு மிகவும் பிடித்த உணவை ஒரு வருடத்திற்கு ஒரு முறை சுமார் பதினைந்து நாட்கள்வரை உண்ணாமல் ஒதுக்கி வை. பால்,பழம் இவைகள் மனதை ஒருநிலைப்படுத்த உதவும். உண்ணும்போது சர்க்கரையோ உப்போ குறைவாக இருந்தால் அந்த உணவை அமைதியாக உண்டு பழகு. சர்க்கரையோ உப்போ திரும்ப கேட்காதே..

## 5.தியான அறை

உனக்கென தனியாக ஓர் அறையை தியானம் செய்ய பூட்டிவைத்துக்கொள்.

## 6.தானம்/உதவி

தினமும் அல்லது பிரதி மாதமும் உன்னால் இயன்ற அளவு நலிந்தோர்க்கு உதவி செய்.உதாரணமாக– உன் வருமானத்தில் ரூபாய்க்கு ஆறு காசு வீதம்.

## 7.நன்னூல்களை வாசித்தல்

தினமும் அரை மணி முதல் ஒரு மணி நேரம் வரை கீதை,ராமாயணம்,பாகவதம்,உபனிடதங்கள், விஷ்ணு சஹஸ்ர நாமம், லலிதா சஹஸ்ரநாமம், ஆதித்ய ஹிருதயம், பைபிள்,குரான்,கிரந்த் சாஹிப்,யோகிகள் ஞானிகளின் உபதேசங்கள், புத்தகங்கள், போன்றவற்றை விடாமல் படித்து அவற்றைபற்றி சிந்தித்து மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.

## 8.பிரம்மச்சரியம்

வீரியத்தை கவனமாக காக்கவும். வீரியம் கடவுளின் வெளிப்பாடு.கடவுளின் அருட்செயல். வீரியத்தில்தான் எல்லா சக்தியும் உள்ளது. வாழ்க்கை,எண்ணம், அறிவு இவற்றின் சாரம்சம் இதில்தான் உள்ளது.

## 9.பிரார்த்தனை சுலோகங்கள்

சில சுலோகங்களை மனப்பாடமாக தெரிந்துவைத்துக்கொள்ளவேண்டும். தியானம் அல்லது ஜபம் செய்வதற்கு முன் இதனை சொல்லும் போது மனதை இது பதப்படுத்தி உயர்நிலைக்கு எடுத்துச்செல்லும்.

## 10.சத்சங்கம்

நமக்கு சத்சங்கம் அவசியம்

(*சான்றோர்கள்; உயர்ந்த சிந்தனை,பழக்கம் உள்ளவர்களுடனான தொடர்பு..அவர்களுடனான உரையாடல் இதுவே சத்சங்கம்.ஞான வாழ்க்கைக்கு சத்சங்கம் மிகவும் அவசியம் என ஆதி சங்கரர் வலியுறுத்துகிறார்.*)

தீய சகவாசங்களை விடவேண்டும். புகைபிடித்தல்,மாமிச உணவு மற்றும் குடிப்பழக்கம் இவற்றை முற்றிலும் விடவேண்டும். தீய பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளாமல் இருக்கவும்.

## 11.விரதம்

ஏகாதேசி போன்ற நாட்களில் அரிசி,கோதுமை போன்ற உணவு உண்ணாமல் பால் மற்றும் பழம் மட்டுமே உண்டு விரதம் அனுஷ்டிக்கலாம்.

## 12.ஜபமாலை

நம் கழுத்திலோ அல்லது பையிலோ ஜபமாலை வைத்துக்கொள்ளவேண்டும். இரவில் தலையணைக்கு அடியில் ஜபமாலை வைத்துகொள்ளவும்.

## 13.மவுனம்

தினமும் இரண்டு மணி நேரமாவது மவுனம் காக்கவேண்டும்.

## 14.உண்மை பேசுதல்

எல்லா தருணத்திலும் உண்மையை பேச வேண்டும். குறைவாகவும் இனிமையாகவும் பேசவேண்டும்.

## 15.எளிய வாழ்வு

உனது தேவைகளை குறைத்துக்கொள். நான்கு சட்டை வைத்திருந்தால் அதை இரண்டாக குறைத்துக்கொள். மகிழ்ச்சியாகவும் திருப்தியுடனும் வாழவும். தேவை இல்லாத கவலைகளை விடுங்கள். எளிய வாழ்வு உயர்ந்த சிந்தனை இதுவே நம் கொள்கையாகும்.

## 16.அகிம்சை

யாரையும் சிறிதளவுகூட சொல்லிலோ செயலிலோ துன்புறுத்தகூடாது.கோபத்தை அன்பாலும் மன்னிக்கும் குணத்தாலும் தயா உணர்வாலும் வெற்றிகொள்ளவேண்டும்.

## 17.மற்றவர்களை சார்ந்து வாழாமல் இருப்பது

எல்லாவற்றுக்கும் வேலைக்காரர்களை நம்பி வாழக்கூடாது. தன் தேவைகளை தானே பூர்த்திசெய்துகொள்ளவேண்டும்.

## 18.சுய பரிசோதனை

ஒவ்வொரு நாளும் இரவில் உறங்குவதற்க்கு முன் அன்று செய்த தவறுகளை எண்ணிப்பார்த்து அவற்றை சரிசெய்ய முயலவும். தினசரி டைரி ஒன்றை வைத்துக்கொண்டு அதில் சுய திருத்தம் செய்துகொள்ளும் குறிப்பு அவசியம். பழைய தவறுகளை எண்ணி நொந்துபோக வேண்டாம்.

## 19.கடமை ஆற்று

இறப்பு நமக்கு எப்போது வேண்டுமானலும் வரும் என்பதை நினைவில் கொண்டு நம் கடமைகளை நல்லொழுக்கத்துடன் செம்மையாக செய்துவரவேண்டும்.

## 20.இறைவனை சரணடைதல்

எழுந்த உடனேயே இறைவனை நினை.உறங்கும் முன்பும் நினை. தினமும் உன்னை (உடல்,மனம்,அறிவு,செயல்,மொழி,திறமை) இறைவனின் பாதங்களில் முழுவதுமாக சமர்ப்பித்து வாழ்.

*****

## கர்ம யோகம்



ஆச்சார்யா வினோபா

(ஆச்சார்யா வினோபா அவர்கள் ஒரு மாபெரும் கர்மயோகி ஆவார்கள். இந்து, இஸ்லாம்,கிருத்துவ மத தத்துவங்களை நன்கு படித்து

தெளிந்தவர்.பன்மொழி புலமை பெற்றவர்.1932 ஆம் ஆண்டு இவர் ஒத்துழையாமை இயக்க சொர்பொழிவின் போது கைது செய்யப்பட்டு தூலே சிறையில் 6 மாதம் அடைக்கப்பட்டார். அங்கு இருந்தவர்கள் வினோபாவிடம் கீதை சொற்பொழிவை வழங்கும் படி கேட்க, ஆச்சார்யாவும் ஒவ்வொரு ஞாயிறும் அனைவரும் கூடியிருக்க சிறையில் கீதை சொற்பொழிவை வழ்ங்கினார். 18 ஞாயிறுகளில் 18 அத்தியாயத்தை பற்றி தன் அனுபவ அறிவினால் நுட்பமாக பேசினார். அது பிற்காலத்தில் வினோபாவின் பார்வைக்கு பின் புத்தகமாக வெளியிடப்பட்டது.அந்த கீதை பேருபதேசம்”” என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவைதான் தமிழாக்கம் செய்யப்பட்டு இங்கு தரப்பட்டுள்ளது.---- இணைய நிர்வாகிகள் )

**சகோதரர்களே..கர்மத்தின் பலனை தியாகம் செய்வது கர்மயோகத்தின் மையமாக இருக்கிறது**. நம் கேள்வி என்னவென்றால் இவ்வாறு கர்மபலனை தியாகம் செய்து செயல்புரியும் கர்மயோகிக்கு இதனால் ஏதாவது பலன் உண்டா என்பதுதான்!! எண்ணற்ற பலன்கள்

கர்மயோகிக்கு கிடைக்கிறது என்று கூறுகிறது கீதையின் மூன்றாவது அத்தியாயம்.

இங்கு எனக்கு மகாலெட்சுமியின் சுயவரம்தான் ஞாபகம் வருகிறது. எண்ணற்ற கடவுள்களும், ராட்சஷர்களும் மகாலெட்சுமியை மணம் புரிய விருப்பம் கொண்டு அங்கு கூடியிருந்தனர். மகாலெட்சுமியும் எந்த போட்டியையும் அங்கு அறிவிக்கவில்லை. சுயவரம் நடக்கும் மண்டபத்துக்கு வந்த மகாலெட்சுமி,"**என்னை அடைய யாருக்கு விருப்பம் சிரிதளவேனும் இல்லையோ அவரையே நான் மணம் முடிப்பேன்**" என்றார்.ஆனால் அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் இவரை மணம் முடிக்கும் பேராசையில் இருந்ததால் விதியின்படி திருமணத்திற்க்கு தகுதியற்றவர்களானார்கள். மகாலட்சுமியும் தன்னை அடைய விருப்பம் இல்லாத ஒருவரை தேட தொடங்கினார். இறுதியாக சாந்தசொரூபியாக பாம்பின்மேல் படுத்திருக்கும் பரமாத்மன் மகாவிஷ்ணுவை கண்டார். பரமாத்மனின் சலனமற்ற இதயத்தினை உணர்ந்த மகாலெட்சுமி அவரது கழுத்தில் தான்

வைத்திருந்த சுயம்வர மாலையை அணிவித்து அவரது திருப்பாதங்களில் அன்றிலிருந்து அமர்ந்துகொண்டு இருக்கிறாள்.இந்த காட்சியை விளக்கிய கவியோ,” தன்னை அடைய யார் சிறிதும் விரும்பவில்லையோ அவருக்கு சேவகனாய் இருக்கிறாள் மகாலெட்சுமி” என்கிறார்.

உலக பற்று உள்ளவன் ஏராளமாய் உழைத்து சிறிது பலனையே பெறுகிறான். ஆனால் கர்மயோகியோ சிறிதளவே உழைத்து பெரும் பலனை அடைகிறான். இவர்கள் இருவரது மனோபாவனையே இதற்க்கு காரணம். டால்ஸ்டாய் இதைபற்றி கூறும்போது,” மக்கள் இயேசுவை எவ்வளவு புகழ்கிறார்கள்! ஆனால் சாதாரண மனிதன் இயேசுவைவிட மிகவும் அதிகமாக கஷ்டப்படுகிறான். அதிகமான சுமையை தூக்குகிறான். ஆனால் அதில் சிரிதளவேனும் பற்றுன்றி இறைவனுக்கான தொண்டாக ஆற்றியிருந்தால் இவன் இயேசுவைவிட சிறந்தவன் என போற்றப்பட்டிருப்பான்.” என்கிறார்.

குசேலர் கிருஷ்ணனை பார்க்க சென்ற போது கொஞ்சம் அவலை மட்டும் எடுத்துச்சென்றார். அதன் சந்தைமதிப்பு மிகவும் குறைவுதான். ஆனால் குசேலருக்கோ அது விலைமதிப்பற்ற ஒரு பொருள். ஏனெனில் அதில் குசேலரின் பக்தி,அன்பு என்ற முத்திரை உள்ளதால் அதன் மதிப்பு அளவிட முடியாததாக ஆயிற்று. பாவனை அதன் மதிப்பை நிர்ணயிக்கிறது.

நாம் வைத்திருக்கும் பணம் ஒரு காகிதம்தான். அதை எரித்தால் ஒரு துளி தண்ணீரை கூட அது சூடுபடுத்துமா என்பது சந்தேகம். ஆனால் அதில் இருக்கும் அரசாங்கத்தின் முத்திரை அதன் மதிப்பை உயர்த்தி நிற்கிறது.

இதுதான் கர்மயோகத்தின் இரகசியம். கர்மம் புரிதல் என்பது ஒரு பணத்தை போன்றது. இறைசிந்தனையில்,ஆன்மநேய ஒருமைப்பாட்டில் லயித்த மனோபாவனைதான் அதில் உள்ள முத்திரை. இவை சேரும்போது அந்த கர்மம் தன்னலமற்ற தொண்டாக மாறுகிறது.

கங்கையில் நீராட இருவர் செல்கின்றனர். ஒருவன்," என்ன புனித நீராடல் இதில் உள்ளது? இரண்டு ஹைட்ரோஜன் மூலக்கூறும் ஒரு ஆக்சிஜன் மூலக்கூறும் இணைந்த இந்த நீரில் என்ன புனிதம் உள்ளது?" என்று கூறிக்கொண்டு குளித்தான். மற்றவனோ,"இந்த கங்கை மகாவிஷ்ணுவின் பாதத்திலிருந்து உருவாகி சிவப்பரம்பொருளின் ஜடாமுடியில் குடிகொண்டுள்ளாள். எண்ணற்ற யோகிகளும் சித்தர்களும் இவளது கரையில் தவம் செய்துள்ளனர். எண்ணற்ற நற்காரியங்கள் இந்த கரையில் நடக்கின்றன என்ற மனோபாவனையில் குளித்தான். இருவருக்கும் உடல் சுத்தி என்னவோ கிடைத்தது உண்மை. ஆனால் உயர்ந்த பாவனையில் குளித்த இரண்டாமவனுக்கு சித்த சுத்தி என்ற அரும் நிகழ்வு நடந்தது. இந்த கர்ம பலங்களை நாம் ஆராய்ந்தால் சித்த சுத்தி, உள்ளே இருக்கும் தேங்காய்க்கும், உடல் சுத்தி வெளியில் உள்ள தேங்காய் நாருக்கும் சமம் எனலாம்.

வெளிப்புர தோற்றத்தில் செயல்கள் ஒன்றாக இருக்கலாம். ஆனால் தன்னலமற்று

இறைசிந்தையில் ஒருவன் ஒரு செயலை செய்ய அது அவனை ஆன்மீகத்திலும், தார்மீகத்திலும் உயர்ந்த நிலைக்கு எடுத்து செல்கிறது. மற்றவனுக்கோ அந்த செயல் கர்மபந்தத்தை உண்டாக்குகிறது.

கர்மயோகி விவசாயி உழவை சுதர்மமாக, கடமையாக எண்ணி பயபக்தியோடு செய்து கொண்டே இருப்பான்.தனது மன இச்சைகளை, வயிற்றை நிரப்பும் நோக்கம் கொண்டு அதை அவன் செய்வது இல்லை. எண்ணற்ற மனிதர்கள் இந்த உழவினால் பயன்பெறுவர். அவர்கள் உடல்,உள்ளம் தழைக்கும் என்ற உன்னத மனோபாவனையோடு உழவை செய்வான். இறைவன் எனக்கு அளித்த இந்த உழவு என்ற சுதர்மத்தை கொண்டு நான் அவன் படைப்புக்கு சேவை செய்யும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று உழவான கடைமையை செய்வான். இவனும் வயிற்றை நிரப்புவான். ஆனால் உணவு கருவி. உழவு இவனது நோக்கம். ஆனால் உலகபற்று உள்ளவனுக்கோ உணவு நோக்கம்,உழவு அதற்க்கான கருவி.இதை உன்னிப்பாக புரிந்து கொள்ளவேண்டும்.

உலகப்பற்று உள்ளவன் தனது மன இச்சைகளை தணிக்கும் பொருட்டு பலப்பல சித்த விருத்திகளுக்கு ஆளாகி உழவை பணம் பண்ணும் செயலாகமட்டும் பார்த்து செய்வதால் கர்மபந்தத்துக்கு ஆளாகிறான். அவ்வாறு செய்வதால் உழவு அவனுக்கு விதிக்கப்பட்ட சுதர்மமாக,கடமையாக எண்ணாமல் பணம் பண்ணும் கருவியாக பார்க்கிறான்.

உலக பற்று உள்ளவன் மிகுந்த பற்று கொண்டு தனது ஆதாரங்களில் சாந்தம் இன்றி சுயநலமிக்க பலனை பிரதானமாக கொண்டு எல்லா செயல்களையும் செய்கிறான்.எல்லா செயல்களும் வெளிப்புரத்தில் ஒன்றாக இருந்தாலும் கர்மயோகி, உலகபற்றுள்ளவன் இருவரும் இருவேறு துருவங்களில் இருந்து அதே செயலை செய்கிறார்கள். ஒரு கர்மத்தை செய்யும்போது கிடைக்கும் பலன் என்னவோ இருவருக்கும் கிடைக்கத்தான் செய்கிறது.

ஆனால் கர்மயோகியின் உன்னதமான, கர்மபலன் பற்றிய சிந்தையில் அல்லாடாத, தன்னலமற்ற, ஆன்மனேய ஒருமைப்பாட்டுடன் இறைவனின் திருவடியில் பணிவுடன்

கர்மத்தையும் அதன் பலனையும் சமர்ப்பித்து அப்பழுக்கின்றி நிறைவாக செய்ய கூடிய செயல் அவனுக்கு சித்த சுத்தியையும், இறை தரிசனத்தையும் தர, உலக பற்று உள்ளவனுக்கோ தன்முனைப்புடனும் ,சுயநலத்துடனும் கர்மபலன்மேல் உள்ள ஆழ்ந்த பற்றுடனும் செய்யும் அதே செயல் இறுதியாக கர்மபந்தத்தையும், சொல்லொன்னா மன உளைச்சலையும்,இருளையும் தருகிறது.

**********

கீதையின் சுருக்க உரை கேட்க இந்த லிங்க்கை கிளிக் செய்யவும்...(internet required)

Click to Listen

**********




*இதழ் முற்றும்*